1990 மார்ச் 29]

தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு.

* 8072—திரு. மு. க. ஸ்டாலின்:

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒலி-ஒளி காட்சியாகத் தயாரிக்கப்பட்டு அது பல ஆண்டு காலமாக வெளியிடாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இப்போது அதை விரைவாக வெளியிடுகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 1979-ல் பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒலி-ஒளி காட்சியாகத் தயாரிக்கப்பட்டு சென்னை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி, ஈரோடு ஆகிய 6 இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் 1 மாத காலம் நடைபெற்றது. பின்னர் இது நிறுத்தப்பட்டது.

(ஆ) இது போன்ற முக்கிய கால கட்டத்தில் இதனை மீண்டும் நடத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

10-25 மணி

திரு. மு. க. ஸ்டாலின் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி காட்சியாக தயாரிப்பது போல பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும், அதைப்போல நமது அரசின் சார்பில் இந்த ஆண்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அண்ணல் அம்பேத்கார் ஆகியோரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதாக அறிவித்திருக்கிற நிலையில் இந்த நூற்றாண்டு விழாவை பயன் படுத்தி அவர்களுக்கும் இது போன்ற ஒளி-ஒலிக் காட்சிகள் அமைக்கின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஒலி-ஒளிக் காட்சிகள் அமைக்கச் சொல்லி இப்போது உத்தரவிட்டிருக்கிறார்கள். இங்கே இந்த

வருடம் நூற்றாண்டு விழாவை ஒட்டி கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கும், அம்பேத்கார் அவர்களுக்கும் ஒலி-ஒளிக் காட்சிகள் அமைப்பது பற்றி உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்; மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அடங்கிய கோட்டூரில் அமைந்துள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் தற்போது விண்வெளி ஆராய்ச்சிகள் பற்றிய நிகழ்ச்சிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. நாள்தோறும் ஏராளமான மக்கள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். எனவே அங்கு தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளிக் காட்சியாக நடத்துகின்ற முறையில் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உறுப்பினருடைய கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

புதுக்குடி கிராம கூட்டுறவுச் சங்கம்.

*2057—திரு. பி. எச். பாண்டியன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சேரன் மகாதேவி தொகுதியிலுள்ள புதுக்குடி கிராம கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், சேரன் மாதேவி ஊரில் உள்ள புதுக்குடி கிராம கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 1988 முதல் மார்ச் 1989 வரையிலும் கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுடைய மதிப்பு ரூ. 68,610. ஏப்ரல் 1989 முதல் பிப்ரவரி 1990 வரை 47,750 ரூபாய்க்கு மொத்த துணி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இதுவரையிலும் 92,609 ரூபாய் அந்த சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள 23,781 ரூபாய் விரைவில் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS